நல்லூர் கிளை நூலகம்
மாநகர சபை மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆவணி 07    (23 - 08 - 1992)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 187

## மேலும் ஓர் உணவுக் கப்பல் சேவையில் ஈடுபடுத்த கோரிக்கை

யாழ். குடாநாட்டிற்கான அத்தியாவசிய பொருள்களை ஏற்றும் பணியில், மேலும் ஒரு கப்பலை ஈடுபடுத்தும்படி யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்கு நேற்று அனுப்பிய வானொலிச் செய்தியில் இவ்வாறு அவர் கேட்டுள்ளார். பெருகிவரும் அகதிகள் தொகை, தரைப் போக்குவரத்து துண்டிப்பால் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறை, அடுத்துவரும் மழைக் காலம் என்பவற்றைச் சுட்டிக் காட்டியே அவர் இச்செய்தியை அனுப்பி வைத்துள்ளார். ஏற்கனவே ''குமாரி'', ''குமண'' ஆகிய இரு கப்பல்கள் அத்தியாவசிய பொருள்களை ஏற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றன என்பதுதெரிந்ததே. (பா)

# நேற்றும் விமானப்படை அனர்த்தம்
# அகதி முகாம் மீதும் குண்டுவீச்சு

## மோதல்கள் தணிவு

யாழ். குடா நாட்டின் வலி வடக்கு, வலி மேற்கு பகுதிகளில் நேற்று மோதல்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியில் தளபதிகள்

வடபகுதி நிலைமைகளை நேரில் பார்வையிட என சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்தின, கடற்படைத் தள

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மாதகல் பகுதியில் 40 வயோதிபர்கள் கைது

(நமது நிருபர்)

மாதகல் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின்போது வீடுகளில் தங்கியிருந்த நாற்பதிற்கும் மேற்பட்ட வயோதிபர்கள் சிக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்கள் அனைவரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மாதகல் அந்தோனியார் ஆலயத்தினுள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் எவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

## திருமலைப் பகுதியில் தேடுதல் பெண்கள் உட்பட பலர் கைது

திருமலை தம்பலகாமம் பாலம் போட்டாற்றில் பலவந்தமாய் சிங்கள, முஸ்லிம்கள் மத்தியில் குடியேற்றப்பட்ட தமிழர்களின் வீடுகள் பொலிசாரினால் சோதனையிடப்பட்டதாய்த் தெரியவருகிறது.

இதன்போது பெண்கள் உட்படப் தமிழ் மக்கள் பலர்கைது செய்யப்பட்டதாயும் தெரியவருகிறது.

## மன்னார்த் தீவிலிருந்து தமிழர் வெளியேறத் தடை

மன்னார்த் தீவில் உள்ள தமிழ் அகதிகள் தம்மை மன்னார் மடு அகதிமுகாமிற்கு மாற்றும்படி விடுத்த கோரிக்கை புறக்கணிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மன்னார் தீவிற்கு சென்றிருந்த வெளிநாட்டுத் தூதுவர்களைக் கொண்ட குழுவினரிடமும் மக்கள் இவ்

மன்னார் மாவட்ட பெருநிலப்பரப்பில் புதிதாய்த் திறக்கப்பட்ட தட்சிணா மருதமடு அகதி முகாமிற்கு செல்வதற்காகவே இவ் வேண்டுகோளை மக்கள் விடுத்துள்ளதாய் தெரியவருகிறது.

மேலும் மன்னார்த் தீவை விட்டு தமிழ் மக்கள் வெளி

## மல்லாகத்தில் பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்று மூன்றாவது நாளாக வலி-வடக்கிலும், வலி-மேற்கிலும் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின. மல்லாகத்தில் நடத்தப்பட்ட குண்டுவீச்சில் அகதிமுகாம் ஒன்றும். பல வீடுகளும் சேதமடைந்தன. சிலர் காயமடைந்தனர். பண்டத்தரிப்பில் நடத்தப்பட்ட தாக்குதலின்போது கோயில் ஒன்றும், வீடுகளும் சேதமாகின.

நேற்றுக் காலை 6 மணி முதல் பண்டத்தரிப்பு, மல்லாகம் பகுதிகளில் வட்டமிட்ட மூன்று குண்டுவீச்சு விமானங்கள் பன்னிரண்டு குண்டுகளை வீசின.

இதன்போது மல்லாகம் கோணப்புலம் அகதிமுகாம் மீது வீசப்பட்ட குண்டுகளினால் ஊறணி மல்லாகத்தை சேர்ந்த செல்லர் வசந்தராணி (வயது 22) தர்மசிங்கம் மதன் (வயது 17)ஆகியோர் படுகாயமடைந்தனர்

தொடர்ந்து மல்லாகம் புகையிரத நிலைய வீதியில் நடாத்தப்பட்ட குண்டுவீச்சினால் மல்லாகம் பிரதான வீதியைச் சேர்ந்த சீ. செல்வராசா (வயது 35) என்பவர் படுகாயமடைந்தார். இப்பகுதியில் பல வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

இறுதியாக பண்டத்தரிப்பு இந்துக்கல் லூரிக்கு அருகாமையில் மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதல்களினால் ஐயனார் ஆலயமும் சில வீடுகளும் சிறு சேதமடைந்தன. (ச,9,11,பா)

## குடிமனைகளை நோக்கி பலத்த எறிகணைவீச்சு

### - மாகியப்பிட்டியில் நால்வர் காயம்

பலாலி - மாதகல் ஆகிய பகுதிகளில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் வலிவடக்கு குடிமனைகளை நோக்கி மூர்க்கத்தனமான எறிகணைத்

பகுதிகளில் இருந்து இராணுவத்தினரினால் ஏவப்பட்ட எறிகணைகள் மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு ஆகியபகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

ஒரு சிறுவன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

## புலிகளின் லண்டன் கிளை பிரசார நிலையம் மட்டுமே

### பிரிட்டிஷ் பா.உ.

(கொழும்பு)

லண்டனிலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகம் ஒரு பிரசார நிலையமாக மட்டுமே செயற்படுகிறது என தான் நம்புவதாக தற்பொழுது கொழும்பிற்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் பாரளுமன்ற உறுப்பினர் நிரஞ்சன் தேவ அதித்திய தெரிவித்துள்ளார்.

இலங்கையரான இவர் பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினராக கடந்த பொதுத்தேர்தலில் தெரிவு செய்யப்பட்டார்.

அவர் மேலும் கூறுகையில் பிரிட்டிஷ் அரசாங்கம் உதவி வழங்கும் போது உதவிபெறும் நாட்டின் நடவடிக்கைகளை பற்றி ஆராய்வது வழக்கம் என்று கூறினார்.

ஜனநாயக ரீதியிலான அரசாங்கம் மனித உரிமைகள் சிறுபான்மையினரை நடத்தும் விதம் ஆகிய அம்சங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் விசேட கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

சிறிலங்காவிற்கான பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளாஸ்ரன் வெளியேற்றப்பட்டதையடுத்து பிரிட்டிஷ் சிறிலங்கா உறவுகள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வலி-மேற்கு பகுதியில் திருடர் கைவரிசை

(பண்டத்தரிப்பு)

சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொண்டுவரும் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களுக்கு அஞ்சி மக்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறியதை அடுத்து பல வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு நாட்களில் பண்டத்தரிப்பு, சில்லாலை, பிரான்பற்று ஆகிய இடங்களில் ஐந்திற்கு மேற்பட்ட வீடுகளில் பல பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

டுத் தூதுவர்களைக் கொண்ட குழுவினரிடமும் மக்கள் இவ் வேண்டுகோளை விடுத்திருந்தனர்.

விட்டு தமிழ் மக்கள் வெளியேறுவதை இராணுவத்தினர் தடை செய்துள்ளனர்.

தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்தனர். பலவீடுகள் சேதமடைந்தன.

நேற்றுக்காலை மேற்படி

இராசையா புவனேஸ்வரி மாகியப்பிட்டி, எஸ். அமிர்தலிங்கம் [80 வயது) பிள்ளையார் கோவிலடி அராலி க. சரோஜா (வயது34)மற்றும்

இவற்றைவிட அளவெட்டி, குடவத்தை ஆகிய பகுதிகளிலும் விமானங்களில் இருந்து எறிகணைகள் வீசப்பட்டது இதனால் சில வீடுகள் சேதமாகின. (பா), (9), (10)

# அதிகாரிகள் இழப்பை ஈடு செய்ய முடியுமாம்

## – புலப்படுத்தவே இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

"கண்ணிவெடியில் இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டமையால் ஏற்பட்ட இழப்புக்களை எம்மால் ஈடுசெய்ய முடியும். இதனாலேயே யாழ். குடாநாடு மீதான இராணுவ நடவடிக்கையை நீண்டகாலம் ஒத்திப் போடவில்லை.'' இவ்வாறு ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் கூறியுள்ளார்.

பி. பி. ஸி. க்கு பிரட்மன் வீரக்கோன் வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

உயர் இராணுவ அதிகாரிகளின் இழப்பை எம்மால் ஈடு செய்ய முடியும் என்பதை வெளிக்காட்டவே குடாநாடு மீதான ''ஒப்பரேசன் பூமியதிர்ச்சி'' என்ற இராணுவ

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# முதற்கட்ட நடவடிக்கை பூர்த்தி என்கிறது அரசு

## இரண்டாம் கட்டம் வடமராட்சியிலாம்

சிறிலங்கா முப்படைகளும் இணைந்து நடத்திய ஒப்பரேசன் பூமியதிர்ச்சியின் முதலாம் கட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாகிவிட்டதாக சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமை அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழன் அதிகாலை ஆரம்பமான இராணுவ நடவடிக்கையில் பதினெட்டு இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகக் கூறிய அவ் அதிகாரி மாதகல் பகுதியை இராணுவத்தினர் கைப்பற்றியதுடன் முதலாம் கட்ட நடவடிக்கை பூர்த்தியாகிவிட்டதாக தெரிவித்தார்.

மேலும் ஒப்பரேசன் பூமியதிர்ச்சி இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இது பலாலி இரா

[4 ஆம் பக்கம் பார்க்க]

# மாவீரர்களுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

(சுன்னாகம்)

பண்டத்தரிப்பு நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் நேற்று முன்தினம் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 2 ஆம் லெப்டினன்ட் அண்ணாநம்பி, வீரவேங்கை அருள்தாசன் ஆகியோரின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக நேற்று மாலை மயிலணி மகாவித்தியாலயத்தில் வைக்கப்பட்டது.

இவ்விரு வேங்கைகளின் புகழுடல்களுக்கும் பெருந்தொகையான மக்கள் தமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தினர்.

தொடர்ந்து சோபன் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இதில் மகளிர் முன்னணியைச்சேர்ந்த செல்வி அனுரா, வலிகாமம் பிரிவு அரசியல் நிர்வாகஉதவிப்பொறுப்பாளர் இமையவன் ஆகியோர் அஞ்சலிஉரை நிகழ்த்தினார். (9, 11)

# பெருமளவு அகதிகள் தென்மராட்சியிலும் தஞ்சம்

(தென்மராட்சி)

சிறிலங்கா முப்படைகளும் இணைந்து வலிகாமம் வடக்கிலும், மேற்கிலும் நடாத்தி வரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அப்பகுதிகளில் இருந்து பெருந்தொகையான பொதுமக்கள் தென்மராட்சிப் பகுதியில் தஞ்சமடைந்துள்ளனர்.

அளவெட்டி, மல்லாகம், இளவாலை, விளான், பண்டத்தரிப்பு போன்ற பகுதிகளில் இருந்தே இவர்கள் இடம் பெயர்ந்து வந்துள்ளனர். (35)

# ஒரு லட், மக்கள் இடம் பெயர்வு அரச நிவாரணம் உடன் இல்லை

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கு, வலிதெற்கு பகுதிகளில் இருந்து சுமார் 20 ஆயிரம் குடும்பங்களைச் சேர் ஒரு லட்சம் பேர்வரை இடம் பெயர்ந்து வேறு இடங்களிலும் அகதிமுகாம்களிலும் தங்கி உள்ளனர் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி இடம் பெயர்ந்தவர்களுக்கான சமைத்த உணவுகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முறிவுறும் தறுவாயில் காங்கிரஸ்-அ.தி.மு.க. உறவு

(சென்னை)

தமிழ் நாட்டில் ஆளும் அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், இந்திரா காங்கிரசுக்கும் இடையில் நிலவிய கசப்பு நிலை முற்றி உறவு முறியும் தறுவாயில் உள்ளது.

வருகின்ற நாடாளுமன்ற மக்கள் அவை இடைத் தேர்தலில் அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனியாக இந்திரா காங்கிரஸ் கட்சியை எதிர்த்து நிற்கும் என்று நேற்று அமைச்சர் அரங்கநாயகம் அறிவித்துள்ளார்.

அண்மையில் மூப்பனார் விடுத்த அறிக்கையின்படி தமிழ் நாட்டில் ஆளுங்கட்சிக்கு எதிர்க் கட்சியாக இந்திரா காங்கிரஸ் செயற்படும் என்று கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இனப்பிரச்சினை தீர்வுக்கு முஸ்லிம் காங்கிரஸ் திட்டம்

## செப்டம்பர் 5இல் அறிவிக்கும்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இனப்பிரசினைத் தீர்வுக்கான தனது திட்டத்தை எதிர்வரும் செப்டம்பர் மாதம் ஐந்தாம் திகதியளவில் முன்வைக்கும் என்று அக்கட்சியின் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் கூறியுள்ளார்.

அக்கட்சியின் பொலிட்பீரோ இனப்பிரச்சினையின் தீர்வுக்காக விரிவான சமாதானத் திட்டம் ஒன்றைத் தயாரித்து வருவதாகவும் எதிர்வரும் செப்டம்பர் ஐந்தாம் திகதி சர்வதேசப் பத்திரிகையாளர்கள் பலரும் கலந்துகொள்ளக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்படும் செய்தியாளர் மாநாட்டில் அத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுமெனவும் எம்.எச்.எம். அஷ்ரப் மேலும் கூறியுள்ளார்.

இத்திட்டம் நியாயமானதாகவும், சகல சமூகங்களுக்கும் நீதி வழங்கக் கூடியதாகவும் இருக்குமென அவர் மேலும் கூறினார்.

**பரீட்சை நிலைய**

**மாற்றம்**

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை நிலைய மாற்றங்கள் பற்றிய விபரங்கள் 3 ஆம் பக்கத்திலும், க.பொ.த. உயர்தரபரீட்சை நிலைய மாற்றங்கள் பற்றிய விபரங்கள் 4 ஆம் பக்கத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# குண்டர் படையாலேயே அரசாங்கம் ஜீவிக்கிறது -ஐவன்

(கொழும்பு)

''குண்டர் படையால் சிறிலங்கா அரசு ஜீவிக்கிறது. சிறிலங்கா அரசால் குண்டர்படை ஜீவிக்கிறது'' இவ்வாறு இலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் திரு ஐவன் தெரிவித்திருக்கிறார். பி.பி.ஸிக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

இப்பேட்டியில் அவர் தொடர்ந்து கூறும்போது குண்டர் படைக்கு சிறிலங்கா அரசு நவீன ஆயுதங்கள் மற்றும் வாகனங்கள் உட்படசகல வசதிகளையும் செய்துகொடுத்துள்ளது.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

**வேரோட நீர் வேண்டும்**

**நீர்தேக்க குளம் வேண்டும்**

## வரி விளம்பரம்

**புத்தகக்கண்காட்சியில்**

ஐந்து மீரா பிரசுரங்களை வாங்குபவர்களுக்கு 50 ரூபா பெறுமதியான ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' என்னும் புதிய நாவல் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர் கோயில் முன்புறம் நல்லூர். (சி/4908)

**வெளிவந்து விட்டது**

நொடியும் விடையும் பாகம் IV புதிய புத்தகம் — பரிசுப்போட்டி முடிவுகளுடன் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ''கோப்பாய் — சிவம்'' வெளியீடுகளை நல்லூர் உற்சவ காலத்தில் நல்லை ஆதீனம் — அஷ்டலக்ஷ்மியிலும், ஸ்ரீகாந் புத்தக சாலையிலும் பெறலாம். பூந்தோட்டம் (சிறுவர் பாடல்கள்), பொறுக்கிய முத்துக்கள் (பொன்மொழித் தொகுப்பு). (3043)

**Hitachi Rechargable Battery**

வீடியோ கமராவுக்குரிய Rechargable Battery 12 Volts ym-bp 22 நல்ல நிலையில் விற்பனைக்குண்டு டில்கா வாச்வேர்ஸ், 284 ஸ்ரான்லி வீதி (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம் (3061)

**புதிய மீரா நாவல்**

பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் படித்துப் புகழும் நாவல்கள். நீங்களும் படித்துப் பாருங்கள். இதுவரை வெளிவந்த இருபத்தியொரு ''மீரா'' நாவல்களில் எட்டு நாவல்கள் மட்டுமே விற்பனைக்குண்டு. உங்கள் பிரதிக்கு முந்துங்கள். விரைவில் ''இயல்வாணன்'' எழுதிய ''சுவடுகள்''. (3040)

**பகவான் ஸ்ரீநீலகண்ட பாபா நூல்கள்**

பகவான் ஸ்ரீ நீலகண்டபாபா அற்புத வரலாறும், செப்டம்பரில் வியாழமாற்றமும் செவ்வாய் மாற்றமும் ரூ. 8.50 (இரண்டாவதுபதிப்பு) எங்கும் விற்பனையாகின்றன. (நூலாசிரியர்) Prf சத்தியதாஸன் கிடைக்குமிடம் கிருஷ்ணசாமி புத்தகசாலை நவீனசந்தை, யாழ்ப்பாணம் (3064)

**ஸ்ரீ கருமாரி சோதிட நிலையம்**

உங்களின், உங்கள் குழந்தைகளின் நிகழ்கால, எதிர்கால பலன்களை அறிய நாடுங்கள். அன்னை ஆதிசக்தி ஸ்ரீதேவி கருமாரியின் அருள் பெற்ற சோதிடர் அம்பிகைதாஸ் அவர்களை, துப்பளைமேற்கு

# வெட்டவெளியான சூனியப்பகுதியாக தமிழ்க் கிராமமான வெல்லா வெளி

## சூனியப்பிரதேசத்தில் இராணுவ ஆட்சிக்கு தென்தமிழீழத்தில் வெல்லாவெளி ஒரு சாட்சி

தமிழ் மக்கள் பல்லாண்டுகளாக வாழ்ந்த முந்நூறு குடும்பங்களைக் கொண்ட பழந் தமிழ்க் கிராமமான பட்டிருப்பு தொகுதியைச்சேர்ந்த வெல்லாவெளிப் பிரதேசம் இன்று வெட்ட வெளிப்பிரதேசமாக சூனியப் பிரதேசமாக காட்சி அளிக்கின்றது என அங்கிருந்து வெளியேறிய அகதிகள் தெரிவிக்கின்றனர்.

அங்குள்ள மக்கள் அனைவரும் சிறிலங்காப்படைகளின் அட்டூழியங்கள் காரணமாக 1990 யூன் இல் இடம்பெற்ற வன்செயல்களைத்தொடர்ந்து வெவ்வேறு கிராமங்களைச் சென்றடைந்துள்ளனர்

அகதிகளாக இடம்பெயர்ந்தவர்களின் சொந்த இருப்பிடங்கள் அனைத்தும் முற்றாகவே தரைமட்டமாக்கப்பட்டு மீளக்குடியமர முடியாத நிலையில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர் எனத்தெரிவித்துள்ளதுடன், அரச கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படாத நிலையிலும் நிவாரணமாக வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்களை விற்றே குழந்தைகளுக்கான பால்மா உணவுகளை வாங்குகின்றனர் என்றும் தெரிய வந்தது.

இங்குள்ள கல்விக்கூடமும் எரிக்கப்பட்டுள்ளதால் இங்குள்ள பிள்ளைகள் தமது கல்வி வாய்ப்புக்களை இழந்த நிலையிலும் உள்ளனர்.

இக்கிராமத்தில் இயங்கி வந்த உதவி அரசஅதிபர் அலுவலகம் கூட சேதமாக்கப்பட்டுள்ளதால் தனியார் வீடொன்றிலேயே இவ்அலுவலகம் இயங்குகின்றது.


இங்கு வசித்துவந்த பெரும்பாலான மக்கள் விவசாயிகள். இவர்களில்பெரும்பாலானோர் கால்நடை வளர்ப்புகளில் ஈடுபட்டு வந்தனர். இராணுவ நடவடிக்கைகளை அடுத்து கால்நடைகள் அழிக்கப்பட்டும் களவாடப்பட்டும் உள்ளதால்இவர்களது உழைப்புக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது

இங்கு ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது பலியானவர்களுக்கான கொடுப்பனவுகள் கூடஇன்னும் வழங்கப்படாத நிலையிலேயே உள்ளன.

எனவே சொந்தக் கிராமமான பட்டிருப்புத் தொகுதியின் வெல்லாவெளிக் கிராமத்தை விட்டு வேறு கிராமங்களில் அகதிகளாக தஞ்சமடைந்திருக்கும் இத்தமிழ் மக்கள் சொந்தக் கிராமங்களில் குடியேறுவதற்கும் தொழிலில் ஈடுபடுவதற்கும் இராணுவம் தடைவிதித்து வருகிறது.

## ஆண்டு இரண்டிலும் அலைமோதும் நினைவுகள்

| எங்கள் மைந்தனாய் | | செங்கள மாவீரனாய் |
|---|---|---|
| 23 | | 23 |
| \| | | \| |
| 03 | | 08 |
| \| | | \| |
| 1973 | | 1990 |



**2-ம் லெப். சின்ன அல்பேட்**

(சடாட்சரம் தனீஸ்வரன்)

## தெற்கை திருப்திப்படுத்தவே வடக்கில் தாக்குதல்கள்

– பாஸ்கரன்

(பருத்தித்துறை)

''சிறிலங்கா இனவாத சிங்கள அரசின் ஒன்பது இராணுவ, கடற்படை அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் வேவுப் பிரிவினரால் கொல்லப்பட்டது சிறிலங்கா அரசிற்கும், பாதுகாப்புப் படையினருக்கும் தென் இலங்கையில் பாரிய நெருக்கடியைத்தோற்றுவித்துவிட்டது இந்நிலையிலே சிங்கள அரசானது தமிழீழத்தில் மிகப்பெரியதொரு தாக்குதலை மேற்கொண்டு இன்றைய நெருக்கடியை சமாளித்து தென்னிலங்கைமக்களைத் திருப்திப்படுத்த முயற்சிக்கின்றது. இனவாத அரசின் இந் நடவடிக்கைகளை தமிழீழ மக்கள் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும்''

இவ்வாறு அல்வாய் சிறிலங்கா வித்தியாலயத்திலே நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கிலே உரையாற்றிய விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழக வடமராட்சிப் பொறுப்பாளர் திரு பாஸ்கரன் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளித்து தென்னிலங்கையைத் திருப்திப் படுத்துவதற்காக சிங்கள அரசு தமிழீழத்தில் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது சிங்கள அரசின் இந்நடவடிக்கைகளை முறியடிக்க தமிழீழ மக்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.(25

## எதிர்க்கட்சிகள் பிரேரணை விரக்தியையே காட்டுகிறது

[கொழும்பு]

'' எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணையை சமர்ப்பித்தது அவர்களின் விரக்தி நிலைகளைக்காட்டுகிறது. பாரதூரமான பிரச்சினை ஒன்றுக்கு தீர்வு காண்பதில் அரசாங்கம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது ஆயுதப் படையினர் வெற்றிகரமான யுத்தம் ஒன்றில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் இத்தகைய பிரேரணையை சமர்ப்பித்தது இதற்குக் குந்தகமாக இருக்கும். எதிர்க்கட்சியினர் எப்போதும்மக்களுடன் இருந்து விலகிச் சென்றுள்ளார்கள் ''

இவ்வாறு சுற்றாடல்அமைச்சரும், கொள்கை திட்டமிடல் இராஜாங்க அமைச்சருமான விமால் விக்கிரமசிங்கா பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

**உள்ளூராட்சி திணைக்களம் மேற்கொண்ட**

## நூல்கள் கொள்வனவுக்கான கொடுப்பனவு இன்னுமில்லை

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் ஆட்சித் திணைக்களம் 1991ஆம் ஆண்டில் ஈழத்து எழுத்தாளர்களிடமிருந்து கொள்வனவு செய்த நூல்களுக்கான கொடுப்பனவுகளை இன்னமும் செய்யகளம் சுட்டி காட்டியுள்ளது.

இதேவேளை உள்ளூராட்சி திணைக்களகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாவை யாழ். மாநகர சபைக்கு வழங்கப்பட்டிருப்பதால் ஏற்கனவே கொள்வனவு

பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் [வ உ]

**அறிவித்தல்**

எமது சங்கத்தின் இயக்குனர் சபை உறுப்பினர்களையும் சகல பணியாளர்களையும், 23-08-1992 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமுன்றலில் சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்

22-8-92

பதில் பொது முகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்.
பண்டத்தரிப்பு.

(சி 4931)

## நினைவு கூருகின்றோம்... 1992 - 08 - 23

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் தாளையடி வெற்றிலைக்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**தீசன் / குமரிநாடன்** (செல்வத்துரை - கோவில் குஞ்சுக்குளம், ஓமந்தை, வவுனியா)

1985 ஆம் ஆண்டு கிளிநொச்சி, திருவையாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**விவேகன்** (முருகர் சிவனேஸ்வரன் - கண்டாவளை, பரந்தன், கிளிநொச்சி)

முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான் பகுதியில் தாக்குதலின்போது விழுப்புண் அடைந்திருந்து தமிழகத்தில் சிகிச்சை பெற்றுவரும்போது வீரச்சாவெய்திய -

**மானா** (செல்லையா சுப்பிரமணியம் - மாசார்பளை, பளை)

1989 ஆம் ஆண்டு மன்னாரில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

யாழ் ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தந்தை, மகள் ஆகிய இரண்டு தமிழர்கள் - மாவிட்டபுரத்தில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட வியாபாரியான தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு யாழ் கோட்டைப் பகுதியில் விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**பிரதீபன்** (பெனடிக்ற் றெக்சன் - எழுத்தூர், மன்னார்)

மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சத்தியா / சித்தியா**

ஊர்காவற்றுறையில் 2 ஆவது நாளாக உலங்குவானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**பிரதீஷ் / பிரதீப்** (வன்னியசிங்கம் வரேந்திரன் - வந்தாறுமூலை, செங்கலடி, மட்டக்களப்பு)

**விக்னா** (சித்திரவேலு சசிதரன் - 2-ம் குடியிருப்பு, கந்தளாய், திருக்கோணமலை)

**பாபுஜி** (ஐயாத்துரை அருட்செல்வன் - சந்தை வீதி, காங்கேசந்துறை)

**2-ம் லெப். சின்ன அல்பேட்** (சடாட்சரம் தனேஸ்வரன் - 'வீனஸ் மாளிகை', கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டைப்பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**பவான்** (இராசன் இராசகுமார்-துன்னாலை தெற்கு,

சோதிடர் அம்பிகைதாஸ் அவர்களை, துப்பளைமேற்கு (ஸ்ரீ சாரதா தேவி ஆச்சிரமத் திற்கு அருகில். தபால் பெட்டிச் சந்தி), பருத்தித்துறை.
(2895)

## போர்க்கால
### கருத்தரங்குகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க்காலக் கருத்தரங்குகள் வடமராட்சிப் பகுதியில் சிற்றூர்கள் ரீதியாக நடை பெற்றுவருகின்றன. இப்போர்க் காலக் கருத்தரங்குகளிலே தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு, சிறிலங்கா பேரின வாத அரசின் இராணுவ நடவடிக்கைகள், இராணுவ நடவடிக்கைகளைத் தடுப்பதற்குத் தமிழீழ மக்கள் ஆற்ற வேண்டிய பங்களிப்புக்கள் பற்றிய விபரங்கள் தொடர்பான கருத்துரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்போர்க்காலக் கருத்தரங்குகளிலே தமிழீழ விடுதலைப் புலிகள் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு அரசண்ணா, வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு பாஸ்கரன், பருத்தித்துறை வட்டவைப்பொறுப்பாளர் திரு பைந்தமிபன், கரவெட்டி வட்டவைப் பொறுப்பாளர் திரு. மணிவண்ணன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கி வருகின்றனர். (25)

### விபரங்கள்
### கோரப்படுகின்றன

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களின் வீடுகள் இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்திருந்தால் அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஓய்வூதியம் பெறுபவர்கள் தமக்கு ஏதாவது நஷ்டங்கள் ஏற்பட்டிருப்பின் உடனடியாக அதுபற்றிய விபரங்களை அறிவிக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (42)

(சடாட்சரம் தனீஸ்வரன்)

ஆதிக்க வெறியர்களை அடக்க என்று
சாதித்து சென்ற எங்கள் மைந்தா!
சின்ன அல்பேட்டாய் களம் பல வென்றாய்!
ஊர்காவற்றுறையில் மாவீரனாய் ஈராண்டு
- ஆனாலும்
மாறாது எம் பாசம்! ஆறாது எம்துயரம்!
எம் செல்வமே எடுத்திடு மறு அவதாரம்!
தமிழ் ஈழத்தில் வேங்கையாய்!

சடாட்சரம் குடும்பத்தினர்.

''வீனஸ்தங்க மாளிகை'' நீர்வேலி வடக்கு,
187, கஸ்தூரியார் வீதி, நீர்வேலி
யாழ்ப்பாணம். [3058]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
17· 8· 19,5

தமிழ்த் தாயின் மடியில்
13· 9· 1990

### வீரவேங்கை குருபரன்
[சங்கரலிங்கம் யோகசேகரன் (கரன்)]
திதி 23-8-1992

தமிழ்த் தாயின் அன்பினிலே
தணியாத தாகம் கொண்டு
புலியாக மாறி நீ போர்க்களம் புகுந்தாயே
தாய் நாட்டைக் காப்பதற்கு
யாழ் கோட்டைதனிலே-நீ அன்று
வீரச் சமர் புரிகையிலே
தமிழ்த் தாயின் மடியினிலே
துயில் வதற்கு சென்றாயோ
யோகசேகரன் என்னும்
வீரவேங்கை குருபரனே

உன்பிரிவால் துயருறும்
கொக்குவில் மேற்கு பெற்றோர், சகோதரர், சகோதரி
கொக்குவில். உற்றார், உறவினர்.
(3060)

நூல்களுக்கான கொடுப்பனவுகளை இன்னமும் செய்யவில்லை என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.

நூலகங்களுக்கு விநியோகிக்கப்படுவதற்காக பன்முக வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு கொள்வனவு செய்யப்படும் நூல்களுக்கான கொடுப்பனவை வழங்குவதில் அரசாங்க அதிபர் அலுவலகம் அசிரத்தை காட்டுவதே இக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாமைக்கு காரணம் என்று உள்ளூராட்சித்திணைக் களத்துக்கு வழங்கப்பட்டிருப்பதால் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட நூல்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க முடியாது உள்ளூராட்சி திணைக்களம் கையை விரித்துள்ளது

இக்கொடுப்பனவுகளைப் பெற வேண்டிய எழுத்தாளர்களும், பிரசுரகர்த்தாக்களும் யாழ். அரசாங்க அதிபருடன் தொடர்புகொள்ளும்படி உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளர் சம்பந்தப்பட்டோருக்கு கடிதம்மூலம் அறிவித்துள்ளார். (24)

## 45-ம் நாள் நினைவலைகள்



### லெப். சுடரொளி [தீபன்]
(குழந்தைவடிவேல் ரமேஸ்)

சுதந்திரம் வேண்டி நடந்திடும் யாகத்தில்
சுடுகலன் ஏந்தி போர்கணை தொடுத்தவன்
இதந்தரு மனைதனை நீங்கி எங்களின்
இலட்சியப் போருக்கு நித்தலும் உழைத்தவன்
இடைக்காட்டுப் பகுதியில் இடர் செய்து நின்ற
எதிரியின் படைதனை அழித்திடும் போரிலே
இன்னுயிர் நீத்து எம் மண்ணை காத்தவன்
இலட்சியம் வெல்ல இணைந்து நாம் உழைப்போம்

இரண்டாம் குறுக்குத்தெரு, குடும்பத்தினர், உறவினர்,
பருத்தித்துறை. நண்பர்கள்.
[சி / 4930]

**பவான்** (இராசன் இராசகுமார்-துன்னாலை தெற்கு, கரவெட்டி)

காரைநகரில் எதிர்பாராத விதமாக பொறி வெடியில் சிக்கியதில் எம்மைப் பிரிந்த-

**சாந்தன்** (அமிர்தநாதர் ஜோண்தோமஸ்- 8ஆம் வட்டாரம் நெடுந்தீவு மத்தி)

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் படுகொலை செய்யப்பட்ட ஐயங்கேணிவாசி - இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்ட கொம்மாதுறை, உமாமில் வீதியைச் சேர்ந்த கூலித்தொழிலாளி- எல்லைநகர்ப் பகுதியில் வெட்டிக்கொல்லப்பட்ட பொற்கொல்லர்- முஸ்லிம் குழுவொன்றினால் படுகொலை செய்யப்பட்ட ஏறாவூர் 4, மருத்துவமனை வீதி வாசி- ஆறுமுகத்தான் குடியிருப்பில் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்ட ஒருவர் ஆகிய 5 தமிழர்கள்.

மன்னார்-பூநகரிப் பகுதியில், சிறிலங்காப் படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணம் / கன்னாதிட்டி, பொம்மைவெளி, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் விமானங்கள், மற்றும் உலங்குவானூர்திகள் மூலம் மேற்கொண்ட பாரியவான் தாக்குதல்களில் கொல்லப்பட்ட குழந்தை, சிறுமி உட்பட 12 - தமிழர்கள்- மிருசுவில் மருத்துவமனையின் முன் நடாத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட நாரந்தனை மேற்கைச் சேர்ந்த தமிழ்ச்சிறுவன் - சாவகச்சேரியில் சிற்றூர்தி ஒன்றின் மீது, உலங்குவானூர்தியிலிருந்து நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்க் குழந்தை- நாவற்குழியில் உலங்கு வானூர்தியிலிருந்து நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு மியாங்குளம்பகுதியில் சுகவீனம் காரணமாக எம்மைப்பிரிந்த-

**சுது** (பிரகாசம் ரஞ்சன்-ஊறணி, பொத்துவில், அம்பாறை)

ஆனையிறவில், சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். தர்மன்** இராசதுரை ரவீந்திரகுமார் (ரவி) மகான் வீதி, கோப்பாய் வடக்கு)

யாழ்-பண்ணை இறங்குதுறை மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சின் போது, பாதுகாப்புத்தேடி கடலில் குதித்தபோது நீரில் மூழ்கியதில் பலியான தமிழ்ப்பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4929]

### சிந்தனைக்கு

உளறுவாயனும், கேள்விச் செவியனும்
ஊரைக் கெடுத்து விடுவார்கள்
உண்மையென்று உறுதிப்படுத்தியதையே
மற்றவர்க்குச் சொல்லுங்கள்

— யாரோ


## ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23- 08- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## வதந்தி பரப்புதல் தேசவிரோத செயல்

போர் சூழலைச் சாட்டாக வைத்து விஷமிகளால் பரப்பப்பட்டபல்வேறு வதந்திகளால்கடந்த சில தினங்களில் அப்பாவி உயிர்கள் காவு கொள்ளப்படும் அளவிற்கு நிலைமை மோசமடைந்தது.

இராணுவம் மல்லாகம் பகுதிக்குள் ஊடுருவி விட்டதாகப் பரப்பப்பட்ட வதந்தியினால் இருவர் உயிரிழந்ததோடு ஆயிரக் கணக்கான மக்கள் அவசர அவசரமாக வீட்டை விட்டுச் சிதறி ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறு தனது கைக் குழந்தையுடன் ஓடிய இளம்தாய் ஒருவர் தடக்கி வீதியில் விழுந்ததினால் கையிலிருந்த குழந்தை தவறி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தது. வேறொருவர் அதிர்ச்சியால் மரணமடைந்தார்.

கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற எறிகணை வீச்சில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தனது கணவன் இறந்துவிட்டதாகப் பரப்பப்பட்ட வதந்தியைக் கேள்வியுற்ற பெண் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்,

இச்சம்பவங்கள் வதந்தியின் காரணமாக இடம்பெற்ற அவலங்களுக்கு இரு எடுத்துக்காட்டுகளாகும். வதந்திகள் அமைதியான ஒருகாலகட்டத்தில் கூட பல விபரீதங்களுக்கு காரணமாக அமைவதுண்டு. அதிலும் ஓர் முழுமையான யுத்தச் சூழ்நிலை நிலவும் பகுதியில், மக்கள் கலவரமடைந்து போயுள்ள வேளையில் பரப்பப்படும் வதந்திகள் பெரும் அனர்த்தங்களுக்கு வழி வகுத்துவிடக் கூடும்.

மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி பீதிகொள்ள வைக்கும் இவ்வதந்திகளை சில தேசவிரோத சக்திகள் திட்டமிட்டு பரப்பக் கூடும் அதேவேளை திருடர்களும் தமது நன்மை கருதி இவ்வதந்திகள் பரப்புவதற்குக் காரணமாக இருக்கலாம். இதில் யாராகஇருந்தாலும்மக்களைக் குழப்பத்திலாழ்த்தி பயப்பீதியைஏற்படுத்தி மக்களின் மனோ திடத்தை குலைக்க வைக்க எடுக்கும் நடவடிக்கை என்று கூறலாம்.

இவ்வதந்தி பரப்பும் நடவடிக்கையானது சிறிலங்கா வானொலியும், ரூபவாகினியும், அரசாங்கத்தின்கட்டுப்பாட்டிலுள்ளசெய்தித்தாள்களும் செய்து வரும் பிரசாரத்திற்கும் எந்தவகையிலும் குறைந்ததல்ல. தமிழ் மக்களை இராணுவ ரீதியில் தோற்

## தமிழினத்தின் விடிவிற்காய் எந்த சவாலையும் ஏற்பேன்

### - தொண்டமான்

(கொழும்பு)

தமிழினத்தின் விடிவிற்காக எந்தச் சவால்களையும் ஏற்கத் தயாராக இருப்பதாக அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், எனக்குரிய பாராட்டுதல்கள் வெற்றிகள் அனைத்தும் தோட்டத் தொழிலாளருக்கு உரியதாகவே நான் கருதுகிறேன். ஏனெனில் எனது வெற்றிகள் அனைத்தும் அவர்களது ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை அமைச்சர் தொண்டமானுக்கு பாரட்டு தெரிவிக்கும் முகமாக அவுஸ்திரேலியா, மலேசியா ஆகிய நாடுகளில் பாராட்டு விழாக் கூட்டங்கள் நிகழ்த்தப்படவுள்ளன.

## படைக்கு உற்சாகமூட்டவே தாக்குதல் நடவடிக்கையாம்

(மணிலா)

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட ஒன்பது இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவத்தால் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட மனச்சோர்வைப் போக்கவும், சிங்கள மக்களிடையே அரசுக்கு எதிராகஏற்பட்டுள்ள உணர்வலைகளை அடக்கவுமே யாழ். குடா நாட்டில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஏ. எவ் பி. செய்திஸ்தாபனம் தெரிவித்தது.

இவ் அதிகாரிகளின் மரணம் இராணுவ நடவடிக்கையை விரைவுபடுத்த சிறிலங்கா அரசை தூண்டியதாகவும் அச்செய்திமேலும் தெரிவிதித்தது.

## அகதி முகாமிலிருந்தும் மக்கள் வெளியேற்றம்

(நமது நிருபர்)

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அகதி முகாம்களில் இருந்த மக்கள் அங்கிருந்தும் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இப் பகுதியில் ஏற்கன வே அமைக்கப்பட்டிருந்த கொம்பனிப்புலம், காட்டுப்புலம், சமாஜமண்டபம், சீனன் கலட்டி, பேரம்பலம் முகாம், தையல்நாயகி தும்புத்தொழிற்சாலை, மணற்புலம், கோணற்புலம், ஐக்கிய வாலிபர் சங்கம், குருக்கள் கிணத்தடி, துர்க்கா ஆலயம் போன்ற இடங்களிலிருந்த பன்னிரண்டு முகாம்களிலும் வாழ்ந்து வந்த மக்கள் முற்றாக வெளியேறியுள்ளனர்.

## உடுகம்பொலவிற்கு மீண்டும் அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொலவுக்கு எதிராக சட்டமா அதிபர் தொடுத்துள்ள இரு வழக்குகளில் ஒன்று கடந்த திங்கள் மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி ஷிரானி திலகவர்த்தனா முன்நிலையில் எடுக்கப்பட்டபோது மீண்டும் அவருக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்ட நீதிபதி வழக்கை செப்டம்பர் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரியின் இருப்பிடத்தை கண்டுபிடிக்க முடியாமல் இருப்பதை குற்றப்புலனாய்வுத் துறையினர் தெரிவித்திருப்பதாக சிரேஷ்ட அரச சட்டவாதிஏ.ஆர் சி பெரேரா நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

## ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை நிலைய மாற்றம் 23-08-1992

இன்று நடைபெறவுள்ள ஆண்டு ஐந்திற்கான புலமைப் பரிசில் பரீட்சை நிலையங்களில் பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளன இம் மாற்றங்களை கவனத்திற்கு எடுத்து பரீட்சார்த்திகள் தத்தமது நிலையங்களுக்கு காலை 8.30 மணிக்கு முன்பாக சமுகமளிக்கும்படி பண்டத்தரிப்பு கோட்ட கல்விப்பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

| முன்னர் தெரிவிக்கப்பட்ட பரீட்சை நிலையம் | புதிதாக தெரிவுசெய்யப்பட்ட பரீட்சை நிலையம் |
|---|---|
| மல்லாகம் மகாவித்தியாலயம் மண்டப இல. I | யூனியன் கல்லூரி (மருதனாமடம்) |
| மல்லாகம் மகாவித்தியாலயம் மண்டப இல. II | யூனியன் கல்லூரி (மருதனாமடம்) |
| அளவெட்டி அருணாசல வித்தியாலம் | சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் |
| அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மண்டப இல. I | சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் |
| அராலி இந்துக் கல்லூரி | யாழ்ப்பாணக் கல்லூரி |
| மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம் | சித்தங்கேணி கணேசா வித்தியாலயம் |
| சித்தங்கேணி கணேசா வித்தியாலயம் | வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் |
| பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி | வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி |
| சில்லாலை ஆர்.சி.ரி பாடசாலை | வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி |
| பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டப இல. I | மானிப்பாய் இந்துக்கல்லூரி |
| பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டப இல. II | மானிப்பாய் புனித ஆன்ஸ் ஆர். சி. ரி. எம். எஸ். |

ஏனைய பரீட்சை நிலையங்களில் மாற்றம் எதுவுமின்றி பரீட்சை நடைபெறும்.

## ஈராக்குடனான யுத்தத்திற்கு அமெரிக்கா தயார்

(வாஷிங்டன்)

ஈராக்குடன் மீண்டும் மோதல்கள் வெடித்தால் உடனடியாக பாவனைக்கு விடுவதற்கென இரண்டு விமானம் தாங்கிக் கப்பல்களும், ஏனைய நாற்பத்தியொரு கப்பல்களும், நூறுக்கும் அதிகமான யுத்த விமானங்களும், 23,800 துருப்புக்களும் அமெரிக்காவில் ஆயத்தமாக இருப்பதாகவும் உத்தியோக பூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன.

குர்திஷ்களை பாதுகாக்கும் பொருட்டும் ஈராக்கின் தென் பகுதியில் விமானங்கள் செல்வதற்கு தடைவிதித்து விமான சூன்யப் பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்கு அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்ஸும் நேற்று முன்தினம் இணக்கம் தெரிவித்துள்ளன.

ஈராக்கிய விமானங்கள் அங்கு பறப்பதை தடைசெய்யில் பறந்தால் சுட்டு வீழ்த்தப்படும் எனவும் சதாம் ஹுசைனுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கே 36 ஆவது அட்சரேகையும், தெற்கே 32ஆவது அட்சரேகையும் தவிர மத்திய ஈராக்கில் மட்டுமே இராணுவ விமானங்கள் பறக்க முடியும் என தெரிவிக்கப்பட்டபோதிலும் அமெரிக்காவின் நேச நாடுகள் குறிப்பிட்ட வலயத்துக்கு வெளியே விமானங்கள் செல்வது பற்றி உறுதியான எந்த விதமான உடன்பாட்டுக்கும் வரவில்லை எனவெள்ளை மாளிகை நேற்று அறிவித்தது.

இதேவேளை ஈராக்கிய தூதர் றீட் ஹைடர் தெரிவிக்கையில் அமெரிக்காவில் நேச நாடுகள் எடுத்துள்ள முடிவு ஆத்திர மூட்டும் செயலாகும் என்றும் ஈராக்கிற்கு எதிராக நேசநாடுகள் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு

## தமிழகத்தில் காங்கிரஸிற்கு மூப்பனார் தலைமை தேவை

### மத்திய அமைச்சர்கள் வற்புறுத்து

(சென்னை)

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி தனித்துப் போட்டியிட்டு ஆட்சியை அமைக்க வேண்டும் அதற்கு ஜி. கே. மூப்பனார் தலைமை ஏற்க வேண்டும் என்ற கருத்து சென்னையில் காங்கிரஸ் கட்சிநடத்திய ஆகஸ்ட் புரட்சி பொன்விழாவில் வலியுறுத்தப்பட்டது.

தொடக்க நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மத்திய அமைச்சர்களும் பின்பு நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசியவர்களும் இக் கருத்தை வலியுறுத்திப் பேசினர்.

திராவிடமுன்னேற்றக்சழகம் மற்றும் அ.இ.அ.தி. முன்னேற்றக் கழகங்களையும் பேச்சானார் தலைமை தாங்குவதை எதிர் பார்க்கிறது. மத்தியிலுள்ள நாமும் அதையே எதிர் பார்க்கிறோம் என்றார் அவர்.

## காங்கிரசை பலவீனப்படுத்த மூப்பனார் முயல்கிறார்

### - வாழப்பாடி குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழகத்தில் இந்திரா காங்கிரசைப் பலவீனப்படுத்த முயலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எண்ணங்களுக்கு ஜி. கே. மூப்பனாரின் நடவடிக்கைகள் உறுதுணையாக அமைந்துள்ளன என்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி குற்றம் சாட்டினார்.

கிரசுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

சத்தியமூர்த்தி பவனில் நிருபர்களுடன் பேசிய வாழப்பாடி இராமமூர்த்தி மேலும் தெரிவித்ததாவது;

காங்கிரசைக் காயப்படுத்தவும், பலவீனப்படுத்தவும் தி.மு.க விரும்புகிறது அதனையே மூப்பனார் செய்யும்

வரும் பிரசாரத்திற்கும் எந்தவகையிலும் குறைந்த தல்ல. தமிழ் மக்களை இராணுவ ரீதியில் தோற்கடிக்க வேண்டுமானால் முதலில் அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி மனோவியல் ரீதியில் தோற்கடிக்க வேண்டும் என சிறிலங்கா அரசாங்கம் எண்ணுகிறது. இதனைச் சில சிறிலங்கா இராணுவ அதிகாரிகளே வெளிப்படையாக ஒப்புக் கொண்டும் உள்ளனர். இந்த அடிப்படையில் உருவானதே வதந்திகளையும், கட்டுக்கதைகளையும் வெளியிடும் போலிப் பிரசார யுத்தமாகும்.

இலங்கையில் தமிழ் மக்கள் சிறுபான்மையினராகும். பெருமளவு மக்கள் தொகை உடையதும், சகல வளங்களையும் கொண்டதும், வெளிப்படையாக உலக நாடுகளிடம் உதவிகளை பெறக் கூடியதுமான ஓர் இனவெறி அரசிற்கெதிராக தமது விடுதலைக்காகத் தமிழினம் போராடிக் கொண்டிருக்கிறது. இவ் இனத்திடம் சிங்கள அரசிற்கெதிரான ஆட்பலமும், ஆயுதபலமும் இல்லை. இந்நிலையிலும் சுமார் பத்து வருடங்களுக்கு மேலாகத் தமிழ்மக்கள் வெற்றிகரமாக நடத்திவரும் ஆயுதப் போராட்டத்திற்கு மக்களின் மனோபலமே காரணமாகவுள்ளது. அதாவது குண்டுகள் பொழியும் டாங்கிகளையும். விமானங்களை விடவும் மக்களின் மனோபலம் பெரிதாக இருந்துவருகின்றது.

இந்நிலையில்தான், தமிழரை இராணுவ ரீதியில் வெற்றியீட்ட வேண்டுமானால், முதலில் அவர்களின் மனோபலம் சிதறடிக்க வேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பான பிரசார யுத்தம் ஒன்றை சிங்கள இராணுவம் நடாத்திவருகின்றது.

அதற்கு எந்த வகையிலும் குறையாதது, இவ் வதந்தி பரப்பும் நடவடிக்கையாகும், இதேவேளை அவர்கள் வாய் மொழியாகப் பரப்பும் வதந்திகள் அரசின் நடவடிக்கைகளைவிட மோசமானதாகும். மக்களுக்குக் கூடுதல் குழப்பத்தைக் விளைவிக்கக் கூடியதாகும். இந்த வகையில் இவ்வதந்தி பரப்பும் நடவடிக்கை எவ்வகைகளிலும் தேசவிரோத நடவடிக்கைக்குக் குறைவானதல்ல.

இதேவேளை மக்களும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். முன்பின் அறியாதவர்கள் வாய்மொழிமூலம் கூறும் தகவல்களைத்தொடர்ந்து பரிமாறிக் கொண்டு இருப்பதினால் தம்மை அறியாமலே வதந்தி பரப்பும் நடவடிக்கையில் தான் ஈடுபடுவதை உணர முடியாமல் போய்விடும். இது தனக்கும் கேடாகி, தமது இனத்திற்கும் கேடாகி பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

---

ஈராக்கிய விமானங்கள் அங்கு பறப்பதை தடைசெய்யும் வகையில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் ஈராக்கிய விமானங்கள் இப்பகுதி நேசநாடுகள் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு இது ஒரு சாட்டாக பயன்படுத்தப்பட்டு இருக்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

---

அமெரிக்க ஜனாதிபதி

# தேர்தல் பிரசாரங்களில் புஷ்ஷின் குடும்பத்தவர்கள்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி புஷ் தனது மனைவியையும், புதல்வர்களையும் புதல்விகளையும், தேர்தல் இயக்கத்தில் ஈடுபடுத்தி வருகிறார்

வழக்கமாக பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்க தயக்கம் காட்டும் புஷ்ஷின் புதல்வர்கள் டெலிவிஷனில் தோன்றி ஜனாதிபதி புஷ்ஷின் உடல் நிலை பற்றிய கேள்விகளுக்கு முகம் கொடுப்பதுடன் தங்கள் தந்தைக்கு சாத்தியமானவகையில் உதவியும் வருகின்றனர்.

புஷ்ஷின் புதல்வி டெலிவிஷனுக்கு அளித்த பேட்டியில் எங்கள் தந்தை ஜனாதிபதியாக இருக்க எவரையும் விட தகுதி பெற்றவர் எனத்தெரிவித்துள்ளார். புதல்வர் தெரிவிக்கையில் போட்டியிடுபவர்களில் மிகவும் அனுபவம் வாய்ந்த நேர்த்தியான மனிதர் எனது தந்தை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளைபுஷ்ஷின்மனைவி பார்பரா புஷ்ஷும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார். கடந்தவாரம் கருச்சிதைவு சம்பந்தமாக குடியரசுக் கட்சிக்குள் ஏற்பட்டதகராறைத் தீர்ப்பதிலும் ஈடுபட்டார். குடும்பத்தின் பாரம்பரிய மதிப்பைப்பேணும் ஜனாதிபதியின் கொள்கையை பலப்படுத்தவும், ஜனநாயக வேட்பாளர் கிளின்டன் தனது திருமண பந்தம் முற்றும் சரியானதாக இல்லை என்று கூறியிருப்பதால் இரண்டுக்குமிடையிலான வித்தியாசத்தைப் புலப்படுத்தவும் இந்நடவடிக்கை உதவும் எனத் தெரிவித்துள்ளார்.

# கியூபாவுக்காக 10.6 லட்சம் சென்னையில் திரட்டல்

அமெரிக்காவில் பொருளாதாரத்தடை காரணமாகஉணவுத் தட்டுப்பாட்டில் சிக்கியுள்ள கியூபா நாட்டு மக்களுக்கு அரிசி அனுப்புவதற்காக சென்னையில் நடந்த கூட்டமொன்றில் 10.6 லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

கியூபாவுக்காகத் தமிழக ஒருமைப்பாட்டுக்குழு நடத்திய நிதி திரட்டும் கூட்டத்தில் மேற்கூறிய தொகைக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழககிளை சார்பில் 6லட்சம் ரூபாவும், ஒருமைப்பாட்டுக்குழு சார்பில் முதல் கட்டத் தொகையாக 4லட்சம் ரூபாவும், தி.மு.க மற்றும் இந்திரா காங்கிரஸ் சார்பில் தலா 25,000 ரூபாவும், ஜனதா தளம் சார்பில் 10,000 ரூபாவும் வழங்கப்பட்டன.

கூட்டத்தில் பேசிய தி.மு.க. தலைவர் கலைஞர் மு.கருணாநிதி, கியூபாவுக்குத் தேவைப்படும் உதவியை இந்தியா அளிக்காதது சரியல்ல என்று குறிப்பிட்டார்.

---

மற்றும் அ. இ. அ. தி. மு... ற்றக் கழகங்களையும் பேச்சாளர் மறைமுகமாகத் தாக்கிப் பேசினர்.

தமிழகத்துக்குச் சரியான தலைமை தேவை அதை மூப்பனார் பொறுப்பேற்க வேண்டும் என்று மத்திய சிவில் விமானப் போக்குவரத்து இணை அமைச்சர் எம். ஏ எச். பாருக் கூறினார். நாடு மூப்ப... மூர்த்தி குற்றம் சாட்டினார்.

மூப்பனாரின் ஆதரவாளர்கள் தொடங்கவுள்ள தேசியப் பேரவைக்கும் இந்திரா காங்... னையே மூப்பனார் செய்யும் போது அவரின் நடவடிக்கைகள் தி மு. கவுக்கு ஆதரவாக உள்ளன என்றார்.

# தோழமைக் கட்சிகளை மரியாதையோடு நடத்தவும்

## —மூப்பனார்கோரிக்கை

(சென்னை)

கூட்டணியிலுள்ள தோழமைக்கட்சிகளை மரியாதையோடு நடத்தாத கட்சி வருங்காலத்தில் தோல்வியைத் தான் தழுவ நேரிடும் என்று செல்வி ஜெயலலிதாவை இந்திராகாங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஜி. கே. மூப்பனார் மறைமுகமாக எச்சரித்தார்.

தமது ஆதரவாளர்கள் நடத்திவரும் ஆகஸ்ட் புரட்சிப் பொன் விழாவில் பேசிய மூப்பனார் இவ்வாறு கூறினார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வர வேண்டும் என்று வேறு கட்சியின் உறவை நான் மறைமுகமாக நாடியதாக கூறுவது பொய்யானது. அத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு நான் பயப்பட மாட்டேன் என்றார் மூப்பனார்.

# காங்கிரசை வளர்க்கவே தேசிய பேரவை அமைப்பு

தமிழகத்தில் இந்திரா காங்கிரசை வளர்க்க அனைத்துக் கிராமங்களிலும் தேசிய பேரவை என்ற புதிய அமைப்பு உருவாக்கப்படும் என்று இந்திரா காங்கிரஸ் மூத்த தலைவர் ஜி கே. மூப்பனார் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரசின் பதவிக்காக உள்கட்சிச் சண்டை கிடையாது. அத்தகைய உள்கட்சிச் சண்டைக்கு நான் தலைவராக இருப்பதாகக் கூறப்படுவதும் சரியல்ல என்று அவர் கூறினார்.

---

தமிழக எதிர்க்கட்சி தலைவரை

# பதவி விலக்கக் கோரி வாழப்பாடி குழுவினர் தந்தி

தமிழக இந்திரா காங்கிரஸில் என்றுமில்லாதவாறு வெளிப்படையாகவே கோஷ்டிப் பூசல்கள் வெடித்துள்ளதாக அங்கிருந்துவரும் செய்தி தெரிவிக்கின்றன.

மத்தியஅமைச்சர்கள் பாருக் அருணாச்சலம் ஆகியோரையும் தமிழ்நாடுசட்டப்பேரவை, எதிர்க் கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்தையும், அவர்களது பதவிகளிலிருந்து நீக்க வேண்டும் என்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி அணியைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்கள் இருபத்தெட்டுப் பேர் பிரதமருக்குத்தந்திஅனுப்பியுள்ளனர்

ஆர். சிங்காரம் உள்ளிட்ட சட்டப் பேரவை உறுப்பினர்கள் இந்த அவசர தந்தியை அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

---

## டிக்சிற் டாக்கா பயணம்

இந்தியாவின் வெளிபுறவுச் செயலாளர் ஜே. என் டிக்சிற் மூன்று நாள் அரச முறைப் பயணமொன்றை மேற்கொண்டு டாக்கா பயணமாகியுள்ளார்.

இவ் விஜயத்தின்போது திரிபுராவிலிருக்கும் பங்களாதேச அகதிகளை திருப்பி அனுப்புவது மற்றும் சட்ட விரோதகுடிபெயர்வு என்பவை பற்றி பங்களாதேச அதிகாரிகளுடன் டிக்சிற் பேச்சு நடத்தவுள்ளார்.

---

ராமச்சந்திரா மருத்துவக்கல்லூரி விவகாரம்

# உண்ணாவிரத முயற்சி 64 பேர் கைது 30 பெண்கள்

சிறிராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை அதன் நிறுவன அறக்கட்டளையிடம் தமிழ்நாடு அரசு மீண்டும் ஒப்படைத்ததை எதிர்த்து சென்னையில் நேற்று உண்ணாவிரதமிருக்க முற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

முப்பது பெண்கள் உட்பட அறுபத்திநான்கு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதமிருக்க முயற்சித்த போதே கைது செய்யப்பட்டு மாலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

ஈழநாதம்

# எந்த தமிழ்க் குழுவிடமும் எனக்கு அனுதாபம் இல்லை

## -கருணாநிதி தெரிவிப்பு

எந்தவொரு ஈழத் தமிழ்க் குழுவிடமும் தனக்கோ அல்லது தனது கட்சிக்கோ அனுதாபம் கிடையாது, என்று நேற்று முன் தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் தி மு. க. வின் தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

மேலும் ராஜீவ் காந்தி மற்றும் பத்மநாபா கொலை வழக்குகளில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிய வந்ததில் இருந்து, அவர்கள் மேல் தி. மு. க. விற்கும் தனக்கும் அனுதாபம் அற்றுப் போய் விட்டது.

அத்துடன் தமது கட்சி புலிகளுடன் ஒருபோதும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதே சமயம், தி. மு. க. தலைவர் கருணாநிதியையும், அவரது குடும்பத்தையும் ஊழல் குற்றச் சாட்டுகள் தொடர்பாக விசாரிக்க, தமிழக முதல்வர் செல்வி. ஜெயலலிதா விசாரணைக் கமிஷன் அமைந்துள்ளதை தி. மு. க. செயற்குழு வன்மையாகக் கண்டித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# காபூல் மீது ராக்கெட் தாக்கு 10 பொதுமக்கள் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கிளர்ச்சியாளர் செலுத்திய ராக்கெட்டின் காரணமாக காபூல் சதுக்கத்தில் பத்து பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

அடிப்படை வாதிகளின் தலைவரான குல்புதீன் ஹெக்மத்தியார் விடுத்துள்ள எச்சரிக்கையில் முன்னாள் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தைச் சேர்ந்த உஸ்பெக் இராணுவம் ஒருவார காலத்திற்குள் சரணடையாவிட்டால் காபூலின் மீது தீவிர தாக்குதல் நடாத்தப்படும் என்று கூறினார்.

உஸ்பெக் இராணுவம் வெளியேறுவது தொடர்பாக அரசாங்கம் கால எல்லை ஒன்றை விதிக்காவிட்டால் ஜனாதிபதி துர்கான்கின் ரபானின் யுத்த நிறுத்தம் தொடர்பான வேண்டுகோளுக்கு தான் இணங்கப்போவதில்லை என்று ஹெக்மத்தியார் அறிவித்தார்.

இதேவேளை காபூல் நகரில் சிக்குண்டிருக்கும் 200 இராஜதந்திரிகள் வெளியேற வகை செய்யும் விதத்தில் தற்காலிக யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்ளும்படி ஐக்கியநாடுகள் சபை அரசாங்கத்தையும் கிளர்ச்சியாளர்களையும் கேட்டுள்ளது இந்த யுத்தநிறுத்தம் இன்று கடைபிடிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

காபூலில்உள்ள உணவுவிடுதி ஒன்றின் மீதும் கிளர்ச்சியாளர்களால் நேற்று முன் தினம் றொக்கட் தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டது.

காபூல் நகரில் நீர்விநியோகமோ, மின் விநியோகமோ இல்லை. உணவுப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது குண்டுத் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. ஆயிரக்கணக்கானோர் நகரத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

## பலாலி

பதிரியல் அட்மிரல் ரெனசி பெர்னான்டோவும் அங்கு சென்றுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் பலாலி இராணுவ முகாமில் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மாதகலில் வீரச்சாவு





## உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்கம் தன் பாவனையாளரிற்கு ஆவணி மாதத்திற்கான உலர் உணவு விநியோகத்தை நேற்று ஆரம்பித்துள்ளது. இதையடுத்து அதன் கிளைகள் அனைத்தும்இன்று ஞாயிற்றுக்கிழமை முழுநேரமும் திறந்து விநியோகம் மேற்கொள்ளப்படும் என்று அதன் பொது முகாமையாளர் தெரிவிக்கிறார். அத்துடன் மண்ணெண்ணை விநியோகமும் தொடர்ந்து நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.

## ஒரு லட்சம்

நிறுவனங்கள் கடந்த மூன்று நாட்களாக வழங்கிவருகின்றன

இவர்களுக்கு ஒரு வாரத்திற்கான உலர் உணவு விநியோகத்திற்கு யாழ் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அடுத்த வாரமே உலர் உணவு விநியோகங்கள் ஆரம்பிக்கப்படும் என்று செயலகத்தில் இருந்து கிடைக்கும் தக

## தெய்வீக இசை அரங்கு

நல்லூர் ஸ்ரீ முருகன் தண்ணீர் பந்தல் நிர்வாகிகளால் நடாத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கில் இன்று எஸ் பத்மலிங்கம் அவர்கள் பாடுவார் பக்கவாத்தியங்களாக ஆர். இராதகிருஷ்ணன் வயலினும் எஸ். மகேந்திரன் மிருதங்கமும் எஸ் நாகஜன் கஞ்சிராவும் இசைப்பார்கள்

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இவ் இசையரங்கு இன்று முதல் தொடர்ந்து நடைபெறும்.

## வெடிகுண்டு தயாரித்தோர் கைது

நாட்டு வெடிகுண்டுகளை தாயாரித்த பன்னிரண்டு பேரை தமிழக பொலிஸின் சிறப்புக் குழுவினர் அண்மையில் கைது செய்துள்ளனர். இதேவேளை நாட்டு வெடிகுண்டுகளை தயாரிப்பதற்கு உதவுபவர்கள் குண்டர்கள் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என்று தமிழக பொலிசார் தூத்துக்குடியில் எச்சரிக்கை செய்துள்ளனர்.

## குண்டர்

ஜனாதிபதி பதவியின் ஆயுள் காலம் குண்டர்படையினாலேயே தீர்மானிக்கப்படுகிறது ஜனாதிபதி விரும்பும் நடவடிக்கைகள் அனைத்தையும் குண்டர்படை தேவைக்கேற்றபடி செய்து முடிக்கிறது.

தற்பொழுது குண்டர்படை மாணவர்கள் மீதும் கைவைத்துள்ளது. பத்திரிகையாளர்கள் ஏற்கனவே பல தடவைகள் குண்டர்களால் தாக்கப்பட்டிருக்கின்றனர். தொடர்ந்தும் பத்திரிகையாளர்மீது இவ்வாறான தாக்குதல்கள் நடைபெறுமேயானால் அரசுக்கெதிரான பத்திரிகையாளர்களது பேனா முனைப் போராட்டம் தீவிரமாக்கப்படும் என்று அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்

அத்துடன் தற்போதைய ஜனாதிபதியுடன் நெருக்கமான அமைச்சர் ஒருவரது மெய்ப்பாதுகாவலரே கார்டுனிஸ்ட் மைக்கோ யூனூஸின் வீட்டிற்குச் சென்று அவரை ஆயுதமுனையில் மிரட்டியிருக்கிறார் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## மோதல்

தணிந்திருந்தன பெரிய அளவிலான மோதல்கள் எதுவும் இப்பகுதிகளில் இடம்பெறவில்லை.

எனினும் சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சு தாக்குதலும் இடையிடையே

# முப்படைகளை நவீனமாக்கும் திட்டம் நிதி தட்டுப்பாட்டால் பாதிப்படையாது

## -சரத்பவார்

(டில்லி)

நிதித் தட்டுப்பாட்டினால் நாட்டின் முப்படைகளையும் நவீனமயமாக்கும் திட்டம் எவ்வகையிலும் பாதிக்கப்படமாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் கூறியுள்ளார்.

ஜலந்தர் அருகே ஆதப்பூர் விமான நிலையத்தில் விமானப்படையினர் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில் எந்தவொரு சூழலையும் எதிர்த்து சமாளிக்க முழு அளவில் தயாராக இருக்கும்படி பாதுகாப்பு படைகளிடம் கேட்டுக் கொண்டார். இந்திய ஏவுகணைத் திட்டம் மெதுவாகச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்றும் அது முற்றிலும் உள்ளூர் தொழில் நுட்பங்களைக் கொண்டு உள்ளூரிலேயே தயாரிக்கப்படுவதாகவும் கூறினார்.

கரையோரக் காவல் படையினர் மத்தியில் பேசுகையில் அவர் கரையோரக் காவல் படையின் படைசாதனங்கள் மற்றும் அடிப்படை வசதிகளுக்கு தேவையான எல்லா உதவிகளையும் பாதுகாப்பு அமைச்சு நல்கும் என்றும் குறிப்பிட்டார்.

## பட்டிமன்றம்

(தென்மராட்சி)

இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய முதல்நாள் உற்சவ விசேடநிகழ்ச்சியாக மீனாட்சி அம்பாள் அடியார்கள்சார்பில் இன்றிரவு 7 மணிக்குக் கம்பன் கழக அமைப்பாளர் திரு இ ஜெயராஜ் தலைமையில் பட்டிமன்றம்இடம்பெறவுள்ளது(35)

## மீண்டும் தனிமாநிலகோரிக்கை

(டில்லி)

குர்க்கா தேசிய முன்னணியின் மத்திய கமிட்டி தனிமாநிலம் வேண்டுமென்ற கோரிக்கையை மீண்டும் எழுப்பியுள்ளது. டார்ஜிங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற மத்திய கமிட்டிக் கூட்டத்தில் இதற்கென ஒன்பது அம்சத் திட்டமொன்றையும் அம் முன்னணி வகுத்துள்ளது. சுபாஷ் கெய்சிங் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அதிகாரிகள்

நடவடிக்கை காலதாமதமின்றி ஆரம்பிக்கப்பட்டது தாக்குதல் நீண்ட காலத்துக்கு ஒத்திப்போடப்பட்டால் உயர்

## கொழு. செல்லும் நோயாளர் பதிவுசெய்யக் கோரிக்கை

(குருநகர்)

வைத்திய நிபுணர்களினால் கொழும்பு செல்வதற்குச் சிபார்சு செய்யப்பட்ட நோயாளிகள் எதிர்வரும் 24-ஆம்திகதி திங்கள், 25 ஆம் திகதி செவ்வாய்க் கிழமைகளில் சிபார்சு செய்யப்பட்ட அத்தாட்சிக் கடிதம், அடையாள அட்டைகளுடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்து தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு வைத்திய சாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (21)

## தகுந்த அடையாளத்துடன் பெற்றுக் கொண்டேன்

20 - 08 - 1992 இல் எஸ் நாகராசாவினால் பத்திரிகை மூலம் வெளியிடப்பட்ட 3 1/2 பவுண் நிறை உடைய எனது தங்கச் சங்கிலி 21 - 08 - 1992 இல் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் முன்னிலையில் சி.நாகராசா என்பவரால் எனக்கு கையளிக்கப்பட்டது.

நன்றி

இராச வீதி, திருமதி அ. நிர்மலபவானி
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(3066)

## சிறுகதைகள் எதிர்பார்க்கப்படுகின்றது

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சி கோட்டத்தால் சிறுகதைத் தொகுதியொன்று வெளியிடப்படவுள்ளது. இதற்குத் தரமான சிறு கதைப் படைப்புக்கள் வடமராட்சி எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. படைப்புக்கள் யாவும் இம்மாதம் 30-ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

இதேவேளை வடமராட்சியில் நாடகப் பயிற்சிப் பட்டறையொன்றும் நடாத்தப்படவுள்ளது. இதில் பயிற்சிபெற ஆர்வமுள்ளவர்கள் இம்மாதம் 30-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

குறிப்பு : பலரின் வேண்டுதலுக்கமைய விண்ணப்ப முடிவுத் திகதி 30 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தொடர்புகட்கு:

பொறுப்பாளர்,
விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகம், வடமராட்சி, வதிரி.

(சி-4932

## 3-ம் ஆண்டு நினைவு அலை

## மாதகலில் வீரச்சாவு



2-ம் லெப்டினன்ட்
அண்ணாநம்பி
(கண்ணலிங்கம் கையிலைநாதன், மாவிட்டபுரம்)



வீரவேங்கை
நேசன்
(கார்த்தியேசு சிவநாதன், வரணி வடக்கு, மாசரி)

யாழ்.குடா நாட்டின் மீது ஒப்பரேசன் 'பூமியதிர்ச்சி' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருந்த படையினருடன் மாதகல் பகுதியில்21-08-1992 அன்று புலிகள் கடும் மோதலில் ஈடுபட்டனர். இம் மோதலில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கததைத் தெரிவித்துக் கொளகின்றனர்.



வீரவேங்கை
காந்தன்
(வைரமுத்துசந்திர மோகன் 5-ம் குறிஞ்சி, ஏறாவூர், மட்டக்களப்பு)



வீரவேங்கை
அருள்தாசன்
(ஜெனி-கதிரமலைநாதன் ரூபனதாஸ், சுன்னாகம் வடக்கு சுன்னாகம்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### ஒரு லட்சம்

நிறுவனங்கள் கடந்த மூன்று நாட்களாக வழங்கிவருகின்றன

இவர்களுக்கு ஒரு வாரத்திற்கான உலர் உணவு விநியோகத்திற்கு யாழ் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அடுத்த வாரமே உலர் உணவு விநியோகங்கள் ஆரம்பிக்கப்படும் என்று செயலகத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. (பா)

### முதற்கட்டம்

ணுவ முகாமின் கிழக்குப்புறமாக வடமராட்சியை நோக்கி மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்:

ஆயுதமுனையில் மிரட்டியிருக்கிறார் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

### மோதல்

தணிந்திருந்தன பெரிய அளவிலான மோதல்கள் எதுவும் இப்பகுதிகளில் இடம் பெறவில்லை.

எனினும் சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சு தாக்குதலும் இடையிடையே எறிகணைத் தாக்குதலும் இடம் பெற்றன.

தாக்குதல்கள் தணிந்திருந்த வேளைகளில் இப்பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் தங்கள் வீடுகளைப் பார்வையிட்டு திரும்பியதை அவதனிக்கக் கூடியதாக இருந்தது (க)

ணி வகுத்துள்ளது. சுபாஷ் கெய்சிங் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### அதிகாரிகள்

நடவடிக்கை காலதாமதமின்றி ஆரம்பிக்கப்பட்டது தாக்குதல் நீண்ட காலத்துக்கு ஒத்திப்போடப்பட்டால் உயர் இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டதால் இராணுவம் பெரியளவிலான இழப்பைச் சந்திகதுள்ளது என்று நம்புவதற்குச் சாத்தியம் உண்டு என்று அவர் தனது பேட்டியில் மேலும் தெரிவித்திருக்கிறார்

## க. பொ. த. (உயர்தரம்)
## பரீட்சை நிலைய இடமாற்றம்

| முன்னர் அறிவிக்கப்பட்ட பரீட்சை நிலையம் | புதிதாக தெரிவு செய்யப்பட்ட நிலையம் |
|---|---|
| 1. யா/யூனியன் கல்லூரி | யா/யூனியன் கல்லூரி (மருதனாமடம) |
| 2. யா/மல்லாகம் மகாவித்தியாலயம் I | யா/யூனியன் கல்லூரி (மருதனாமடம்) |
| 3. யா/மல்லாகம் மகா வித்தியாலயம் | யா/யூனியன் கல்லூரி (மருதனாமடம்) |
| 4. யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் | யா/சங்கானை சிவப்பிரகா வித்தியாலயம |
| 5. யா/அளவெட்டி அருணோதயாக் கல்லூரி I | யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் |
| 6. யா/அளவெட்டி அருணோதயாக் கல்லூரி II | யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் |
| 7. யா/சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம் | யா சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் |
| 8. யா/வட்டு - இந்து சித்தங்கேணி | யா/வட்டு இந்துக் கல்லூரி |
| 9. யா/அராலி இந்துக் கல்லூரி | யா/யாழ்ப்பாணக்கல்லூரி |
| 10. யா/யாழ்ப்பாணக் கல்லூரி | யா/யாழ்ப்பாணக் கல்லூரி |
| 11. யா/வட்டு திருஞானசம்பந்தர் | யா/வட்டு திருஞான ம்பந்தர் |
| 12. யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் | யா சித்தங்கேணி கணேச வித்தியாலயம் |
| 13. யா/சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி I | யா/சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி |
| 14. யா/சுழிபுரம். விக்டோரியக் கல்லூரி II | யா/சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி |
| 15. யா/பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம் | யா/பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம் |
| 16. யா/சித்தங்கேணி கணேச வித்தியாலயம் | யா/வட்டு இந்துக் கல்லூரி |
| 17. யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி | யா/வட்டு இந்துக் கல்லூரி |
| 18. யா/சில்லாலை றோ. க. த. பாடசாலை | யா/வட்டு இந்துக் கல்லூரி |
| 19. யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி I | யா/மானிப்பாய் இந்துக கல்லூரி |
| 20. யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி II | யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ. க. பெண் பாடசாலை |

பொறுப்பாளர்,
விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகம், வடமராட்சி, வதிரி.
(சி-4932

## 3-ம் ஆண்டு நினைவு அலை

வீர ஜனனம்
10 | 0௮ | 1964



வீரச்சாவு
12 | 08 | 1989

### கப்டன் தினேஸ்

[தம்பிநாயகம் தமிழ்ச்செல்வன்]
உருத்திரபுரம், கிளிநொச்சி

''தாய் மண்ணின் விடிவுக்காய்
தமிழ் என்னும் அமுதுக்காய்
சேய் இவன் செங்குருதியைச்
சிந்தினான் - தன் தோள் தந்து
எங்கள் சந்ததிக்கு உரமானான்
நிழலான இவன் கனவை
நனவாக்குவோம் இது உறுதி''

கிளிநொச்சி மேற்கு,
வட்ட மக்கள்.

[3065]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 22-08-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 5341

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்
26-355, 26-3654, 24-1983, 26-5517, 42-2364, 41.9663, 24-5774, 28-1062, 27-1292, 40-630, 24-7078, 26-3910

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்
42-2355, 26-3530, 22-4710, 28-1110, 41-8445, 41-8031, 26-7299, 26-4036, 42-1792, 40-5216, 28-6640.